12th March 1966]

சட்டக் கமிஷன் அறிவுரை கூறியிருக்கிறதே, அந்த அறிவுரையை யாவது இந்த அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? இதுபற்றி உயர் நீதி மன்றம் அரசாங்கத்திற்குத் தெரிவித்த கருத்துக்கள் யாவை ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் அங்கத்தினர் குறிப்பிடக்கூடிய விஷயம் அரசாங்கத்தின் 'கன்ஸிடேரேஷன்' இல் இருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட விஷயமும், மதுரையில் ஒரு மாநாடு போட்டு அங்கே தெரிவிக்கப் பட்ட நாலைந்து யோசனைகளும் அரசாங்கத்திற்கு வந்திருக் கின்றன. அந்த 'ப்ரபோசல்ஸ்' எல்லாம் அரசாங்கத்தின் 'கன்ஸி டரேஷன்' இல் இருந்து கொண்டிருக்கின்றன.

செங்கற்பட்டு கூட்டுறவு மத்திய பாங்கு

* 270 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

செங்கல்பட்டு மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கியில் இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் இன்று வரையில் தீவிர சாகுபடி திட்டத்திற்காக எவ்வளவு தொகை எத்தனை விவசாயிகளுக்குக் கடனுக வழங்கப்பட்டது, தாலுகாவாரியாக ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : செங்கற் பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரம் கூட்டுறவு மத்திய பாங்கு மூல மாக 1-7-1965 முதல் 31-1-1966 வரை, முனைப்பு வேளாண்மைப் பகுதித் திட்டத்தின் கீழ் தாலுக்கா வாரியாகக் கொடுக்கப்பட்ட கடன் தொகை பற்றிய விவரங்களும் இந்தக் கடன் அளிக்கப்பட்ட குடியானவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	தாலுக்காவின் பெயர்.	முனைப்பு வேளாண்மைப் பகுதி திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட கடன் தொகை.	கடன் கொடுக்கப்பட்ட குடியானவர்களின் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)
1	செங்கற்பட்டு	0·89	185
2	மதுராந்தகம்	1·61	413
3	காஞ்சீபுரம்	0·60	178
4	ஸ்ரீபெரும்புதூர்	0·56	217
5	சைதாப்பேட்டை	0·59	109
6	பொன்னேரி	0·42	76
7	திருவள்ளூர்	0·85	266
8	திருத்தணி	0·72	174

பரங்கிப்பேட்டைப் பகுதி

* 271 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா பரங்கிப்பேட்டை கடலோரப் பகுதியில் இருக்கும் காடுகளின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு ?

[12th March 1966

(இ) அதில் அரசாங்கத்திற்கு (காட்டு இலாகாவிற்கு) தேவையான இடம் எவ்வளவு?

(உ) மீதி உள்ள இடத்தை நிலமில்லாத ஏழைகளுக்குக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) 170.09 ஏக்கர்.

(இ) 170.09 ஏக்கர் முழுவதும் காட்டு இலாகாவிற்குத் தேவையாக இருக்கிறது. அதில் பூராவும் சவுக்கு நடப்பட்டிருக்கிறது.

(உ) இல்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—POINT OF ORDER *RE* POSTPONEMENT OF PRIVILEGE MATTER

MR. SPEAKER : I shall take up the matter of privilege given notice of by the hon. Member, Sri K. A. Mathialagan, after the Hon. Chief Minister comes.

SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order.

MR. SPEAKER : What is the point of order?

SRI K. A. MATHIALAGAN : கனம் சபாநாயகர் அவர்களே, அருள் கூர்ந்து . . ..

MR. SPEAKER : பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

SRI K. A. MATHIALAGAN : அதைத்தான் சொல்லவிட மாட்டேன் என்கிறீர்கள்.

MR. SPEAKER : I would like to know what exactly is the point of order. If the hon. Member wants to raise a point of order against the decision of the Chair, that is a different matter. But, so far as the matter given notice of by the hon. Member is concerned I wish to make it clear to the hon. Member that I am not going to take it up now. I will take it up only after the Hon. Chief Minister comes.

SRI K. A. MATHIALAGAN : Sir, I want to raise a point of order regarding the privilege of the House in general.

MR. SPEAKER : Yes, let the hon. Member state his point of order.